
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜுலை 13, 2023 • புரட்சி 23 • முழக்கம் 26 • விலை ரூ.3.00

# சேலம், சென்னையில் கழகத்தின் தொடர் தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கின

***தமிழ்நாடு முழுவதும் சனாதனக் கொடுமை மற்றும் திராவிடத்தின் சாதனைகளை விளக்கும் ஆயிரம் தெருமுனைக் கூட்டங்களை நடத்துவது என சேலத்தில் கூடிய கழக மாநில மாநாடு முடிவெடுத்தபடி சேலம், சென்னையில் தெருமுனைக் கூட்டங்கள் எழுச்சியுடன் தொடங்கியது.***

*சென்னை மாவட்டக் கழகம் சார்பில் எது திராவிடம் ? எது சனாதனம் ? தொடக்கக் கூட்டமாக, 08.07.2023 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் போரூரில் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக நாத்திகனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்வு நடைபெற்றது. நிகழ்விற்கு நாத்திகன் வரவேற்புரையாற்ற, சுப்பிரமணி முன்னிலை வகித்தார், புகழ்வளவன் நிகழ்விற்கு தலைமை தாங்கினார். மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி துணை பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட கழகச் செயலாளர் இரா.உமாபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். அட்டி அருண் நன்றி கூறினார். சிறப்புரையாற்றிய வாலாஜா வல்லவன் கொடுமைகளை விரிவாக விளக்கினார். (உரை - மூன்றாம் பக்கம்)*

***சேலம்*** *: எது சனாதனம்? எது திராவிடம்? என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் சேலம் மாவட்டத்தின் முதல் தெருமுனை கூட்டம் நேற்று சிறப்பாக நடந்து முடிந்தது.*

*இக்கூட்டத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையேற்று நடத்தினார். மாநகர அமைப்பாளர் தேவராஜ் வரவேற்புரையாற்றினார்.*

*கூட்டத்தின் முதல் நிகழ்வாக பெரியார் விழுதுகள் யாழினி, சுதர்சன் பெரியாரின் பாடலை பாடி கூட்டத்தை துவக்கி வைத்தனர். நமது இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை டேவிட் மக்களுக்கு எடுத்துரைத்தார். ஆத்தூர் மகேந்திரன் மந்திரமா? தந்திரமா? நிகழ்வை சிறப்பாக நடத்தினார். அதைத்தொடர்ந்து மாநகரச் செயலாளர் ஆனந்தி மற்றும் திவ்யா ஆகியோர் எது சனாதனம்? எது திராவிடம்? எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினர். இந்தக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பரமசிவம் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெரியார் பணி குறித்து மக்களுக்கு எடுத்துரைத்தார். கூட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை பிரபு கூட்டத்தை ஒருங்கிணைத்தார். அம்பிகாபதி நன்றியுரை கூறி கூட்டம் நிறைவடைந்தது.*

*இக்கூட்டத்தில் தங்கதுரை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி தலைவர் மற்றும் தோழர்கள் செல்வமணி, இளம்பிள்ளை கோபி , ராஜசேகர், வெற்றி முருகன் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இரவு உணவுடன் இக்கூட்டம் சிறப்பாக நடந்து முடிந்தது.*

**கூட்டத்தின் சிறப்புகள்**

*1. கூட்டம் தொடங்கும் முன்பே நமது கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் ஒலிப்பதிவுகள் ஒலிபரப்பு செய்யப்பட்டு வந்தன நெக்ஸ்ட் தேர்வு குறித்த ஒலிப்பதிவை அப்பகுதி இளைஞர் ஒருவர் தனக்கு பகிரும்படி வாங்கிச் சென்றார்.*

*2. பெரியார் விழுது யாழினி இரண்டு பெரியார் பாடலை பாடி சிறப்பித்தார்.*

*3. பாடல் பாடி முடிந்ததும் கூட்டத்தினரைப் பார்த்து கடவுள் உள்ளார் என்கிறீர்களே கண்முன்னே காட்டுங்கள் என கோரிக்கை வைத்தார்.*

*4. குழந்தைகள் மற்றும் பெரியோர்களை தன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியின் மூலம் தோழர் ஆத்தூர் மகேந்திரன் அவர்கள் மூடநம்பிக்கைக்கு எதிராக சிந்திக்க வைத்தார்.*

*கூட்டம் முடிந்ததும் குழந்தைகள் விளக்கம் கேட்டு அறிவியல் அறிவு பெற்று சென்றனர்.*

*5. தனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்ட சிறிது நேரத்தில் சரியானதொரு உரையை தயார் செய்து திவ்யா சிறப்புரையாற்றினார்.*

*6. அப்பகுதியில் உள்ள காங்கிரஸ் தோழர் ஒருவர் தோழர்கள் அனைவருக்கும் தேனீர் வழங்கினார்.*

# "அறநிலையத்துறை"க்கு வித்திட்ட பனகல் அரசர்



நீதிக்கட்சி தலைவர்களில் ஒருவரான பனகல் அரசரின் பிறந்தநாள், 1866 ஜூலை 9 இல்அவர் பிறந்தார். நீதிக்கட்சியின் சார்பில் சென்னை மாகாணத்தில் ஆறு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்து மகத்தான சாதனைகளை அவர் படைத்தார். வேலை வாய்ப்புகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து முதல் ஆணை பிறப்பித்தவர் பனகல் அரசர். ஆனால் பார்ப்பன அதிகார வர்க்கம் அதை அமல்படுத்தாமல் முடக்கியது. பிறகு கல்வியில் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு இடம் கிடைக்காத நிலையில் அவர்களுக்கு இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக கல்லூரியில் மாணவர் சேர்க்கைக் காண குழு ஒன்றை அமைத்து பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு கல்லூரியில் இடம் கிடைக்க வழிவகை செய்தார்.

அறநிலையத்துறையை முதன் முதலில் உருவாக்கியவர் அவர்தான், அதுவரை கோயில்கள் பார்ப்பனர்களின் சொந்த பராமரிப்பில் கொள்ளையடிக்கப்பட்டு வந்தது. அறநிலையத்துறையை பனகல் அரசர் உருவாக்கிய காலத்தில் பெரியார் காங்கிரஸ் கட்சி இருந்தார். காங்கிரஸ் கட்சியும் நீதி கட்சியும் எதிரும் புதிரும் ஆக இருந்த காலகட்டம், ஆனாலும் பெரியார் பனகல் அரசரின் அறநிலையத்துறை திட்டத்தை ஆதரித்து கடற்கரையில் கூட்டம் போட்டு பேசியது ஒரு வரலாற்றுக் குறிப்பு.

அரசு பதிவேடுகளில் பறையர், பஞ்சமர் என்றுதான் அன்றைக்கு குறிப்பிடப்பட்டு வந்தது, இதற்கு பதிலாக ஆதி திராவிடர் என்ற சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தவர் பனகல் அரசர். ஒரு மாணவன் மருத்துவம் படிக்க வேண்டும் என்று சொன்னால் அவருக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஒரு நிலை இருந்தது, பார்ப்பனர்கள் மட்டும்தான் மருத்துவத்தில் சேர முடியும் என்ற நிலையை மாற்றி சமஸ்கிருதம் ஒரு அடிப்படை தகுதி அல்ல என்பதை உறுதி செய்தவர் பனகல் அரசராவார்.

யுனானி, ஆயுர்வேதம், சித்தா போன்ற மருத்துவ முறைகளுக்கு உயிர் கொடுத்தவரும் அவர்தான். கிராமங்களில் இலவச மருத்துவத்தை ஊக்கப்படுத்துவதற்காக ஊரக மருத்துவ திட்டத்தை அவர்தான் முதன்முதலில் கொண்டு வந்தார். பார்ப்பனர்கள் இவரை சகித்துக் கொள்ள முடியாமல் அவமானப்படுத்துவற்கான வழிகளை தேடிக்கொண்டிருந்தனர். ஒரு முறை பார்ப்பனர் கட்டுப்பாட்டில் உள்ள திருச்சி தேசியக் கல்லூரிக்கு பனகல் அரசரை அழைத்திருந்தனர், பனகல் அரசருக்கு சமஸ்கிருதம் தெரியாது, அவரை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக வரவேற்பு பத்திரத்தை சமஸ்கிருதத்தில் எழுதியிருந்தார்கள். ஆனால் பனகல் அரசர் அதற்கு சரியான பதிலடி கொடுத்தார். அவர் தனது பதிலுரையை சமஸ்கிருதத்திலேயே பேசினார். தனக்கும் சமஸ்கிருதம் தெரியும் என்பதை அப்போது உறுதிப்படுத்தி பார்ப்பனர்களின் மூக்கை உடைத்தவர் பனகல் அரசர்.

அவர் மறைவின்போது பெரியார் எழுதிய எழுத்துகள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும், "ஒரு யுத்தம் முடிந்து வெற்றிக் குறியோடு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் போர் வீரர்கள் சேனாதிபதியின் உத்தரவை எதிர்பார்த்து இருந்த போது சேனாதிபதி இறந்துவிட்டார் என்று செய்தி கிடைக்குமானால், அந்த சமயத்தில் போர் வீரர்களின் மனம் எப்படி துடிக்குமோ, அதுபோல் நம் தமிழ் மக்கள் துடித்திருப்பார்கள்" என்று பனகல் அரசரின் மரணம் குறித்து பெரியார் ஒரு இரங்கல் செய்தியை எழுதினார்.

பார்ப்பனரல்லாத மக்களின் விடிவெள்ளியாக திகழ்ந்த ஒரு மூத்த தலைவரான பனகல் அரசரை நன்றியுடன் நினைவு கூறுவோம்.

# தமிழக முதல்வருடன் சந்திப்பு



*தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோவன் ஆகியோர் ஜூலை 07 அன்று மரியாதை நிமித்தமாக அவரது இல்லத்தில் சந்தித்தனர்.*

# நெக்ஸ்ட் : மற்றுமொரு பேரிடி

*நீட் தேர்வை திணித்து சமூக நீதியின் குரல்வளையை நெரிக்கும் ஒன்றிய பாஜக ஆட்சி இப்போது எம்பிபிஎஸ் மற்றும் பிடிஎஸ் மாணவர்களுக்கு மற்றொரு கடினமான தேர்வை திணிக்க முன்வந்திருக்கிறது. இந்த தேர்வுக்கு பெயர் National Exit Test, இதன்படி விண்ணப்பதாரர்கள் எம்பிபிஎஸ் படிப்பில் சேர்ந்த 10 ஆண்டுகளுக்குள் இந்த தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும், அப்படி தேர்ச்சி பெற்றால் தான் மருத்துவர் சேவை செய்ய முடியும். ஏற்கனவே நீட் தடையை கடந்து மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்று அதற்குப் பிறகு மருத்துவம் படித்து அதற்குப் பிறகும் அவர்கள் மருத்துவத்தில் சேவை செய்வதற்கு பத்தாண்டுகளுக்குள் நெக்ஸ்ட் தேர்வு எழுத வேண்டும்.*

*கல்லூரியில் நான்கரை ஆண்டுகள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் படிக்கிறார்கள், ஓராண்டு பயிற்சி மருத்துவராக பணியாற்றுகிறார், பிறகு மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்து மருத்துவராக பணியாற்றுகிறார். இப்பொழுது நெக்ஸ்ட் தேர்வு எழுதினால் தான் அவர்கள் மருத்துவராக பணியாற்ற முடியும், அதே போல் பல் பட்டப்படிப்புகளுக்கும் நெக்ஸ்ட் தேர்வு பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

# மோடி ஆட்சியின் படு தோல்விகள்

மோடியின் அடுத்த தேர்தல் பிரச்சாரத்திற்கு அது தேவை. அதன் அடிப்படையில் சிறுபான்மை மக்களை அச்சத்திலும், கொந்தளிப்பிலும் வைப்பது. அதனைப் பயன்படுத்தி பெரும்பான்மை மக்களிடம் வெறுப்பரசியலை ஊட்டி தன் கீழ் திரட்டுவது என்பதே அதன் நோக்கம்.

2023 ஜூன்23-இல் பிரதமர் மோடி போபாலில் பாஜக ஊழியர்கள் மத்தியில் பேசும் போது இந்தியா விற்குத் தேவை பொது சிவில் சட்டம் என்றார். இந்தியா வேறுபட்ட சமூகங்களுக்கான வேறுபட்ட சட்டங்களுடன் செயல்பட முடியாது என்றார். அவரது பேச்சு அவரது அரசின் அடுத்த செயல்திட்டம் பொது சிவில் சட்டம் கொண்டு வருவது என்ற நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. 2024 நாடாளுமன்ற தேர்தலை நாடும், மக்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் மோடியின் இந்த பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இந்த ஆண்டு பல மாநிலங்களுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. முன்னதாக மோடி தலைமையிலான அரசினால் அமைக்கப்பட்டுள்ள 22 ஆவது சட்ட ஆணையம் 2023 ஜூன் 14இல் வெளியிட்ட அறிவிப்பில் பொது சிவில் சட்டம் குறித்த கருத்துக்களை ஜூலை 14க்குள் அனுப்புமாறு மத அமைப்புகளையும், பொது மக்களையும் கேட்டுக் கொண்டுள்ள பின்னணியில் மோடியின் இந்த பேச்சு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### நிறைவேறாத வாக்குறுதிகள் :

2014இல் ஆட்சிக்கு வந்த மோடி தலைமையிலான பாஜக ஆட்சி கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறை வேற்றவில்லை. 2019இல் மற்றொரு வாய்ப்பு மோடி தலைமையிலான அரசுக்குக் கிடைத்தது. அதுவும் தனிப் பெரும்பான்மையுடன். 2024இல் பத்தாண்டுக ளைக் கடந்து விடும் இந்த ஆட்சிக்கு மக்களிடம் தனது சாதனைகளாகக் கூற எதுவுமில்லை. மோடியின் வாக்குறுதிகளெல்லாம் நீர்க் குமிழிகளாக மாய்ந்து விட்டன. மக்களின் வங்கிக் கணக்கில் 15 லட்சம் ரூபாய் போடுவது என்பது வெற்று வாய் ஜாலம் என்பதை மக்கள் புரிந்துள்ளனர். வெற்றி பெற்ற பின்னர் அது குறித்து மோடி வாயே திறக்கவில்லை. மாறாக கறுப்புப் பணத்தைக் கண்டறிந்து மக்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதாகக் கூறிய பண மதிப்பிழப்பு நடவடிக்கை நய வஞ்சனை என்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந் தனர். டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பை உயர்த்த 56 இஞ்ச் மார்பு கொண்ட தன்னால்தான் முடியும் என்ற மோடியின் முன்னாலே ரூபாயின் மதிப்பு தினசரி குப்புற வீழ்ந்து கிடப்பதை மறைக்க இயலவில்லை. சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ந்தாலும் அதன் பலன் சாதாரண மக்களுக்குக் கிடைக்காமல் பார்த்துக் கொண்ட மோடி ரஷ்ய- உக்ரைன் போரின் காரணமாக பாதி விலையில் ரஷ்யா விடமிருந்து கிடைக்கும் எண்ணெய்யின் பலனும் மக்களுக்குக் கிடைக்காமல் தனது குஜராத் நண்பர்க ளான கார்ப்பரேட்டுகளுக்கு லாபமாகக் கொட்டிக் குவிவதை உத்தரவாதப்படுத்தியுள்ளார். சமையல் எரிவாயு விலை ஏறியும் மானியம் கூட கிடைக்காமல் அன்றாடம் குடும்பப் பெண்கள் குடும்பம் நடத்தவே சிரமப்பட்டு , மீண்டும் விறகு அடுப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் மக்களிடம் கூற மோடிக்கு எந்த விளக்கமும் கைவசம் இல்லை.

வேலை வாய்ப்புகள் குறித்த கதைகளெல்லாம் ஏமாற்று வித்தை என்பதை இளைஞர்களும் உணர்ந்துள்ளனர். இந்தியப் பொருளாதாரம் வளர்வ தாக பீற்றிக் கொண்டாலும் பண மதிப்பு நீக்கம், தாறுமாறான ஜிஎஸ்டி அமலாக்கம், கொரோனா கொடும் தொற்றின் போது முன் யோசனையின்றி அம லாக்கப்பட்ட முழு முடக்கம் போன்றவை இந்தியப் பொருளாதாரத்திற்கு மரண அடியாகவே விழுந்தது. இத்தகைய சூழலிலும் கூட பெரும் கார்ப்பரேட்டுகள் கொள்ளை லாபம் பார்த்தனர். மோடியின் குஜராத் நண்பரான அதானி, மோசடி மூலம் உலகப் பணக்கா ரர் வரிசையில் முன் பந்திக்கு வந்ததன் ரகசியம் கசிய மோடியின் உத்தமர் வேடம் கலைந்தது. எதிர்க்கட்சிக ளெல்லாம் வற்புறுத்தியும் அதன் மீது எவ்வித விசார ணையும் இல்லை. அதானியையும், இதர கார்ப்பரேட்டுகளின் நலனையும் காக்கவே ஆட்சி என்ற நிலை யினை மோடி தினசரி நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அதன் பிரதிபலன் பாஜகவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமும், இதர வழிகளிலும் வந்தடைகிறது. ஊழலை ஒழிப்பதாகக் கூறி எதிர்க்கட்சிகளை மிரட்ட தனது அதிகாரத்தின் கீழ் உள்ள அமலாக்கத் துறை, வருமான வரித்துறை, சிபிஐ ஆகியவற்றைப் பயன் படுத்தி ரெய்டுகளும், வழக்குகளும் தொடரும் மோடி ஆட்சியில் பாஜகவில் இணைந்தால் ஒரே நொடியில் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் சூரிய ஒளி கண்ட பனித் துளி போல் மறைந்து விடுவது மக்களுக்கே ஆச்சரி யமாக உள்ளது.

### தொடரும் தாக்குதல் :

உண்மை இப்படியிருக்கையில், எதைச் சொல்லி வாக்குகள் கேட்பது, மக்களை அணுகுவது? சிறு பான்மை மக்களை எதிரிகளாகக் கட்டமைத்து வெறுப்ப ரசியலை வளர்ப்பது மட்டுமே அனைத்துப்பகுதி மக்களை, துயரங்களை எல்லாம் மறந்து தங்களை நோக்கி வர வைக்கும் என சங் பரிவாரத்தினர் நம்பு கின்றனர். அதற்கான செயல் திட்டங்களைத் தான் மோடி அரசாங்கம் மூலம் இத்தனை ஆண்டுகளாகச் செய்து கொண்டிருக்கின்றனர். பசுக் குண்டர்கள் மூலம் சிறுபான்மையினர் மற்றும் பட்டியலினத்தவர் மீது நடைபெறும் கொலை வெறித் தாக்குதல்கள் கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தொடர்கின்றன; சற்றும் குறையவில்லை. தேர்தல் நெருங்க நெருங்க அத் தாக்குதல்கள் அதிகரித்து வருவதைத் தற்போதைய சம்பவங்கள் காட்டுகின்றன. 8.06.2023இல் பசுக் குண்டர்கள் தாக்குதலில் 23 வயது லுக்மான் அன்சாரி கொல்லப்பட்டார். 26.06.2023இல் 32 வயது அபான் அன்சாரி கொல்லப் பட்டார். நசீர் குரைசி படுகாயப்படுத்தப்பட்டார். 28.06.2023இல் சகீருத்தீன் எனும் மாற்றுத் திறனாளி பீகாரில் கொல்லப்பட்டார். தொடர்ந்து இத்தகைய தாக்குதல்களில் சிறுபான்மையினர் கொல்லப்படு கின்றனர். இச்சம்பவங்களிலெல்லாம் பசுக் காவலர்கள் எனும் பெயரில் சங் பரிவார குண்டர்களே ஈடுபடுகின்றனர். ஜூன்14 இல் உத்தரப்பிரதேசம் வயர் எனும் கிராமத்தில் சாஹில் கான் எனும் 28 வயது இளைஞர் மரத்தில் கட்டி வைத்து ஜெய் ஸ்ரீராம் எனக் கூறச் சொல்லி தாக்கப்பட்டார். காஷ்மீரில் பள்ளி வாசலில் தொழுகையில் இருந்த முஸ்லீம்க ளைச் சுற்றி வளைத்த ஆயுதம் தாங்கிய ராணுவத்தினர் ஜெய் ஸ்ரீராம் என முழக்கமிடச் சொன்ன செய்தி மக்க ளனைவரையும் அதிர்ச்சி அடையச் செய்தது. கடந்த ஆண்டு இறுதியில் சத்தீஷ்கரில் கிறிஸ்தவர்கள் தாக்கப் பட்டதோடு, அவர்களது தேவாலயங்களும் தாக்குத லுக்கு உள்ளாயின.

### எரியும் மணிப்பூர் :

பாப்ரி மசூதியைத் தொடர்ந்து வாரணாசி மசூதி மற்றும் மதுரா மசூதி குறிவைக்கப்படுகிறது. நாடு முழு வதும் மசூதிகளும், தேவாலயங்களும் சங் பரிவார குண்டர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றன. இது குறித்தெல்லாம் மோடி வாய் திறப்பதில்லை. வெளி நாட்டில் சென்று இங்கு சிறுபான்மை மக்கள் மிகுந்த பாதுகாப்போடு இருப்பதாக பொய் பேசி உண்மைகளை மறைக்க முயற்சிக்கும் மோடியைப் பார்த்து அனைவரும் எள்ளி நகையாடுகின்றனர். ஏன் பாஜக அரசின் இரட்டை நாக்கு அரசியல் சூழ்ச்சியின் காரணமாக கடந்த மூன்று மாதங்களாக மணிப்பூர் மாநிலம் எரிந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்க ணக்கான மக்கள் கலவரத்தில் பலியாகியுள்ளனர். பல்லாயிரம் மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிக ளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான தேவா லயங்கள் இடித்து நொறுக்கப்பட்டுள்ளன. அமைதி பூமியாக இருந்த மணிப்பூர் எனும் கவின் மிகு மாநிலம் எரிமலையாக வெடித்துச் சிதறிக் கொண்டிருக்கும் போது இத்தனை நாட்களாகியும் பிரதமர் மோடி வாய் திறக்கவில்லை. அமைதிக்காகக் கூட குரல் எழுப்ப வில்லை. மாறாக அவரது வாய் வெறுப்பரசியலுக்குத் தீனி போடும் பொது சிவில் சட்டம் குறித்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஆட்சிக்கு வந்த பின்னர் ஒவ்வொன்றாக ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சி நிரலை அமலாக்கி வரும் மோடி அரசு அதன் ஒரு பகுதியாகவே காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் அரசியல் சட்டப் பிரிவு 370 ஐ ரத்து செய்ததோடு, மாநிலத்தையும் இரண்டு யூனியன் பகுதிகளாகக் கூறு போட்டது. ஐந்து ஆண்டுகளாக தேர்தல் இல்லை. ஜனநாயகப் படி தேர்ந்தெடுக் கப்பட்ட அரசு இல்லை. ஜனநாயக உரிமைகள் இல்லை. காஷ்மீர் மக்களை என்றைக்கும் எதிரிக ளாக மாற்றியுள்ளது இந்த அரசு. வெறுப்பு அரசியலின் அடுத்த கட்டம் தான் குடியுரிமை திருத்தச் சட்டம். மத அடிப்படையில் குடியுரிமை வழங்க வகை செய்யும் சட்டத்திற்கு எதிராகவும், தேசிய குடிமக்கள் பதி வேட்டிற்கு எதிராகவும் நாடு தழுவிய போராட்டங்கள் கிளம்பின. இருந்தும் அரசு பின் வாங்கவில்லை. தற்போது அச்சட்ட அமலாக்கம் கிடப்பில் உள்ளது. எப்போது வேண்டுமானாலும் அது மந்திரவாதியின் பூதமென எழுந்து வரலாம். சிறுபான்மை முஸ்லீம் களை எப்போதுமே அச்சத்தில் வைத்திருக்கும் நோக்கம் கொண்டது அச்சட்டம்.

### அரசியல் சட்ட விரோதம் :

அதன் அடுத்த கட்டம் தான் பொது சிவில் சட்டம். அனைத்து மத மக்களுக்கும் ஒரே சட்டம் எனும் மோடி, அனைத்து சாதியினருக்கும் ஒரே சட்டம், ஒரே உரிமை என்பது குறித்து வாய் திறப்பதில்லை. காரணம் வருணாசிரம தர்மம் அனைத்து சாதியின ருக்கும் ஒரே விதி என்பதை மறுதலிக்கிறது என்பதும், வருணாசிரம தர்மத்தைத் தூக்கிப் பிடிப்பதே சங் பரிவாரம் தான் என்பதும் மறுக்க முடியாத உண்மை. இந்தியாவின் அரசியல் சட்டம், பொது சிவில் சட்டம் குறித்து பேசுகிறது என்பது உண்மை. அது வழிகாட்டும் நெறிமுறைகளில் குறிப்பிட்டி ருந்தாலும் அரசியல் சட்டத்தின் பிரிவு 25 முதல் 28 வரை மத சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கிறது. அரசியல் சட்டம் இந்திய குடிமக்கள் அனைவருக்கும் மத சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதுடன், அம்மத மக்கள் தங்களது வாழ்க்கை நெறிகள் குறித்த விசயங்களில் அவர்களே தீர்மானிக்கவும் வகை செய்கிறது. பொது சிவில் சட்டம் என்பது மதங்களைப் பின்பற்றும் மக்களின் தனிச் சட்டங்களில் தலையிடு வதால் இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானதே யாகும். இந்தியா பல மதங்கள், பல இனங்கள், பல மொழிகள், பல கலாச்சாரம் கொண்ட நாடு. வேற்றுமை யில் ஒற்றுமை என்பதே தாரக மந்திரம். ஆனால் மோடி அரசோ பொது சிவில் சட்டம் எனும் அஸ்திரத்தை சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தத் திட்டமிடுகிறது. இதை அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கின்றன.

### மோடியின் விருப்பம் :

2016 ஜூன்மாதத்தில், பாஜக ஆட்சியின் கீழ், ஒன்றிய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறை 21 ஆவது சட்ட ஆணையத்தை பொது சிவில் சட்டம் அமலாக் கத்திற்கான வழி முறைகள் குறித்து ஆய்வு செய்யப் பணித்தது. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி பி.எஸ். சவுஹான் தலைமையிலான 21 ஆவது சட்ட ஆணையம் 2018 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அதில் பொது சிவில் சட்டம் தேவையா னதுமல்ல, விரும்பத் தக்கதுமல்ல என்று குறிப்பிட்டி ருந்தது. எனவே மோடி அரசால் அந்த சிபாரிசின் அடிப்ப டையில் பொது சிவில் சட்டம் நோக்கி நகர இயல வில்லை. தற்போது 22ஆவது சட்ட ஆணையம் ஓய்வு பெற்ற நீதிபதி ரிதுராஜ் அவஸ்தி தலைமையில் மாற்றி அமைக்கப்பட்டு, இந்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அதனிடம் பொது சிவில் சட்டம் குறித்து அறிக்கை கேட்டுள்ளது. இந்தப் பின்னணியில் தான் பிரதமர் மோடி சிவில் சட்டம் குறித்துப் பேசியுள்ளார். தனது நோக்கத்தையும், விருப்பத்தையும் தனது அணிகளுக்கு மட்டுமல்ல, சட்ட ஆணையத்திற்கே தெரிவிக்கும் வகையிலேயே இந்த பேச்சு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 22ஆவது சட்ட ஆணையம் தனது அறிவிப்பில் 21ஆவது சட்ட ஆணையம் அறிக்கை சமர்ப்பித்து 3 ஆண்டுகள் கடந்து விட்டதால் தற்போது சட்ட ஆணையம் அது குறித்து விசாரணை நடத்துவது அவசரத் தேவை எனத் தனது அறிவிப்பில் கூறியுள்ளது. என்ன அவசரம்? மோடியின் அடுத்த தேர்தல் பிரச்சாரத்திற்கு அது தேவை. அதன் அடிப்படையில் சிறுபான்மை மக்களை அச்சத்தி லும், கொந்தளிப்பிலும் வைப்பது. அதனைப் பயன் படுத்தி பெரும்பான்மை மக்களிடம் வெறுப்பரசியலை ஊட்டி தன் கீழ் திரட்டுவது என்பதே அதன் நோக்கம். எனவே சட்ட ஆணையம் மோடியின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலேயே தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஒன்றுபடுவோம்.

**நன்றி : தீக்கதிர் நாளேடு**

# வேதம் – மனு சாஸ்திரத்தின் கலவையே சனாதனம்

## சென்னைக் கூட்டத்தில் வாலாஜா வல்லவன் விளக்கம்

*சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் திட்டமிட்டுள்ள 200 தொடர் தெருமுனைக் கூட்டங்களில் முதல் கூட்டம் ஜுலை 8 அன்று போரூரில் தொடங்கியது. கூட்டத்தில் பேசிய ‘புதிய சிந்தனையாளன்’ ஆசிரியர் வாலாஜா வல்லவன் சனாதனம் குறித்து பல்வேறு கருத்துகளை ஆதரங்களுடன் எடுத்துரைத்தார். அவரது உரையில் இருந்து;*



சனாதனம் என்றால் என்ன? அதை தெரிந்து கொண்டால் அதற்கு மாற்றாக திராவிடம் எப்படி இருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இந்திய வரலாறு எப்படி எழுதப்பட்டிருக்கிறது. ரிக் வேதம் என்பது கிமு 1050 ஆண்டுகள் என்று சொல்கிறார்கள். அப்போது சமஸ்கிருதத்தில் எழுத்து கிடையாது, வழி வழியாக செவி வழியாக பரப்பப்பட்டு வந்தது. அதுதான் இந்து மதத்தின் பழைய நூல், ரிக் வேதம் என்பதுதான் இந்துக்களுக்கு முதன்மையான நூல். ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு நூல் இருக்கிறது, அது எல்லாம் கற்பனை தான். நபிகள் நாயகத்திற்கு எழுத படிக்க தெரியாது, அல்லா மேல இருந்து இறங்கினார், அவர் சொன்னார், அவரது சீடர்கள் எழுதினார்கள் என்று குர்ஆனைப் பற்றி இருக்கும். அதே போல் பைபிள், இயேசுநாதர் இறந்து 400 ஆண்டுகளுக்கு பிறகு தான் பைபிள் எழுதப்பட்டது. பின்நாளில் இருந்து வந்தவர்கள் தான் இதை உருவாக்குகிறார்கள். இதுபோல இந்து கடவுள்கள், தேவர்கள், ரிஷிகளால் பாடப்பட்ட பாடல்கள்.

வேதத்தில் என்ன சொல்லி இருக்கிறது, வேதத்தில் பத்தாவது அத்தியாயத்தில் தான் நான்கு வருணம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன் பிராமணன், தோளிலே பிறந்தவன் சத்ரியன், வயிற்றிலே பிறந்தவன் வைசியன், கால் பாதத்திலே பிறந்தவன் சூத்திரன் என்பது முதன் முதலாக கூறப்படுகிறது. பிறகு மனு சாஸ்திரம் இதைக் கூறுகிறது.

குறைந்தபட்ச 1500 ஆண்டு வரலாற்றில் அண்ணல் அம்பேத்கருடைய ஆய்வுப்படி கிமு 182இல் அதாவது அசோகன் இந்த நாட்டை ஆண்டான் என்பது அனைவருக்கும் தெரியும், அவன் புத்த மதத்தை சார்ந்தவன், புத்த மதத்தை பரப்பினான், அவனுடைய பேரன் பிரகத்திரன் என்பவன் அவையில் இருந்த படைத்தளபதி புஷியமித்ர சுங்கன் படை அணி வகுப்பின் போது கொன்று விடுகிறான், மன்னனை கொன்று விட்டு நானே அரசன் என்று முடி சூட்டிக் கொள்கிறான், அதுதான் சுங்க வம்சம். அவன் தான் முதன்முதலாக இந்த மனுநூலை தன்னுடைய ஆட்சி நூலாக இயற்றுகிறான்.

இந்த மனுவில் அப்படி என்னதான் சொல்லி இருக்கிறது, மனுதர்மத்தில் சண்டாளர்கள் ஊருக்குள் குடியிருக்கக் கூடாது, சண்டாளர்கள் என்றால் ஒடுக்கப்பட்ட பட்டியிலின மக்களைத் தான் குறிக்கப்பட்டார்கள் என்பதை அண்ணல் அம்பேத்கர் தனது ஆய்வு நூல்களில் எழுதி இருக்கிறார். இன்றைக்கு இந்தியா முழுவதும் ஊர் வேறு சேரி வேறாக இருக்கிறது, இதற்கு அடிப்படை காரணமாக இருந்தது மனுதர்மம். இந்த சனாதன தர்மம் என்பதின் அடிப்படை இந்த நான்கு வருணம், இந்த நான்கு வருணம் மட்டுமில்லாமல் ஐந்தாவது ஆக ஒரு வருணம் கிடையாது, அதாவது பஞ்சமன் என்று சொல்வார்கள், பஞ்சமன் என்றால் ஐந்து என்று பொருள், ஆனால் இந்து மதம் நான்கு வருணங்களை மட்டுமே ஏற்றுக் கொள்கிறது. அதனால் இவர்கள் வருணத்தர், பஞ்சமர்கள் அவர்ணத்தர், அதாவது வருணமற்றவர்கள். இந்து மதத்தின் மனுநூலை சட்ட நூலாக வைத்து ஆட்சி செய்த அரசர்களுடைய படை வலிமையினால் இவர்கள் ஊருக்கு வெளியே வெளியேற்றப்பட்டார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பல்லவர்கள் ஆட்சி காலம் கிபி மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. பல்லவர் ஆட்சி காலத்தில் தான் முதன் முதலில் ஆரியர்களுக்கு செல்வாக்கு ஏற்படுகிறது, மகாபாரத கதைகள் அப்பொழுதுதான் தமிழ்நாட்டில் பரப்பப்படுகின்றன, மகாபாரதத்தை படிப்பதற்கு பல்லவர்கள் நிலத்தை அளந்து விட்டதெல்லாம் கல்வெட்டுகளில் காணக் கிடக்கின்றது. இன்றைக்கு பல்லவர்கள் ஆட்சி செய்த பகுதிகளில் மட்டும் தான் திரௌபதி அம்மன் கோயில்கள் இருக்கும், இப்படி அவர்கள் ஆரியப் பிரச்சாரத்தை ஊக்குவித்தார்கள். கற் கோயில்கள் என்பதை முதன் முதலில் பல்லவர்கள் தான் உருவாக்கினர், அதற்கு முன்பெல்லாம் தமிழ்நாட்டில் பெரிய கோயில்கள் எல்லாம் கிடையாது, அதன் பிறகு ராஜராஜ சோழன் தஞ்சை பெரிய கோயில் கட்டினார் என்பதெல்லாம் படித்திருக்கிறோம். தஞ்சை பெரிய கோயிலில் என்ன நடந்தது, வடநாட்டான் ஆதிக்கம் இராஜராஜ சோழன் காலத்தில் நிலைபெறுகிறது. பீகார் பார்ப்பனன் தான் ராஜராஜ சோழனுக்கு தீட்சிதை கொடுத்தான் என்று கல்வெட்டு ஆதாரங்களில் இருக்கிறது. அண்ணாமலை பல்கலைக்கழகம் அதை வெளியிட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் ஊர் வேறு, சேரி வேறு மட்டும் கிடையாது, சுடுகாடு ஒன்றாகக் கிடையாது, ஆதிதிராவிடர்களுக்கு தனி சுடுகாடு, ஊர் குடியானவர்களுக்கு தனி சுடுகாடு, பார்ப்பனர்களுக்கு தனி சுடுகாடு இப்படி மூன்று விதமான சுடுகாடுகள் எல்லா ஊரிலும் இருந்தன. ஆய்வாளர் பேராசிரியர் சதாசிவ பண்டாரத்தார் எழுதிய சோழ வரலாற்றில் ராஜராஜ சோழன் பறையர்களுக்கு தனியாக சுடுகாட்டிற்கு இடம் அளந்து விட்டார் என்பதை கல்வெட்டு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகிறார். இப்போது பறை சுடுகாடு, ஊர் சுடுகாடு என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாட்டில் அரசர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுதான் சனாதனம். நால் வர்ணம், நான் மேல் சாதி, நீ எனக்கு அடுத்த சாதி, நீ அதற்கும் கீழ் சாதி என்று மனுவில் சொல்லியிருக்கிறார். இந்த மேலே இருக்கிற மூன்று ஜாதிகளுக்கும் சூத்திரன் பணிவிடை செய்வதுதான் அவனுடைய கடமை, சூத்திரன் சொத்துக்களை சேர்த்து வைக்கக் கூடாது, அப்படி சேர்த்து வைத்திருந்தால் அதை பறிமுதல் செய்து கொள்ளலாம், இந்த பார்ப்பனர்களுக்காக சோழ மன்னர்கள் அளந்துவிட்ட நிலங்கள் ஏராளமானது. 4 வேதங்களை தெரிந்திருந்தால் சதுர்வேதி மங்கலம், 3 வேதங்களை தெரிந்திருந்தால் திரிவேதி மங்கலம், இப்படி ஏராளமான நிலங்களை ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பார்ப்பனர்களுக்கு கொடுத்து பார்ப்பனர்கள் சொல்படி ஆட்சியை சோழர்கள் முதல் அதன்பின் வருகிற எல்லா அரசர்களும் நடைமுறைப்படுத்தினார்கள்.

தேவதாசி முறை :

தேவதாசி முறை என்பது பல்லவர் ஆட்சி காலத்தில் தொடங்கி விட்டது, அதேபோல சதாசிவ பண்டாரத்தார் பிற்கால சோழர் சரித்திரத்தில் ராஜராஜ சோழன் ஆட்சியில் 400 தேவரடியார்கள் இருந்தார்கள், அந்த 400 தேவரடியார்களுக்கும் தனி வீதி இருந்தது. அந்த 400 தேவரடியார்களுக்கும் அரசர்கள் நிலங்களை அளந்து விட்டிருக்கிறான். அவர்களின் வேலை என்ன? பொட்டு கட்டிக் கொள்ள வேண்டும், திருமணம் செய்து கொள்ளக் கூடாது, கோயில்களில் திருவிழாக்களில் நடனம் ஆட வேண்டும், அதன் பிறகு பார்ப்பனர்களுக்கும் மேல் சாதிக்காரர்களுக்கும் அடிமை அரசியாக இருக்க வேண்டும். இப்படி ஒரு நிலை 1000 ஆண்டு காலமாக இந்த நாட்டில் இருந்தது. சனாதனத்தின் பெயரால் கடவுளின் பெயரால் இப்படி மனுநீதியில் பெண்களுக்கு எட்டு வயதிற்குள் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று எழுதி இருக்கிறது, இந்து மதம் எங்கே போகிறது என்ற நூலை அக்னி கோத்திரம் ராமானுஜ தாதாச்சாரியார் எழுதி இருக்கிறார். ஏன் எட்டு வயது வைக்கிறார்கள், எட்டு வயதுக்கு மேல் பருவமடைந்து விடுவார்கள், பருவம் அடைந்தால் உணர்ச்சி ஏற்படும், உணர்ச்சி ஏற்பட்டால் பார்க்கிற ஆண்களை நேசிக்க தோன்றும், இப்போது வர்ண கலப்பு ஏற்பட்டுவிடும், வர்ண கலப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதினால் தான் குழந்தைகளுக்கு எட்டு வயதில் திருமணம் செய்து வைக்க வேண்டும். அக்னி கோத்திர தாத்தாச்சாரியார் எழுதுகிறார், எனக்கு எழுதுவதற்கு கூசுகிறது, எழுதிய இந்த பேனாவை உடைத்து வீசி விடலாமா என்று தோன்றுகிறது ஏனென்றால் மனு அவ்வளவு மோசமான ஒரு தண்டனையை எங்களைப் பெற்ற பெற்றோர்களுக்கு எழுதுகிறான். எட்டு வயதிற்குள் உன்னுடைய பெண்ணிற்கு திருமணம் செய்து வைக்கவில்லையானால் ஒவ்வொரு மாதம் அவளது மாதவிடாயை பிடித்து நீ குடிக்க வேண்டும், இதற்கு பயந்து கொண்டே அவர்கள் குழந்தை திருமணங்களை செய்து வைத்தார்கள். இதற்கு என்ன தீர்வு என்று கேட்டால் அதற்கு ஒரு பரிகாரத்தை மனுவில் எழுதி இருக்கிறார்கள், அப்படியானால் அந்தப் பெண்ணிற்கு திருமணம் நடைபெறுகின்ற வரை ஒவ்வொரு மாதமும் ஒரு பசு மாட்டை ஒரு ஏழை பிராமணனுக்கு கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கொடிய அடக்குமுறை இந்த நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வந்தது. இந்த முறை கிழக்கிந்திய கம்பெனியினரால் ஒழித்துக் கட்டப்பட்டது. அதன் பின் நீதிக்கட்சி ஆட்சியில் இதனை முழுமையாக ஒழித்துக் கட்டினார்கள்.

எல்லா நகரத்தையும், ஒவ்வொரு ஊர் அமைப்பு முறையும் எடுத்துக் கொள்ளுங்கள் நகரத்தின் மையத்தில் கோயில் இருக்கும், கோயிலைச் சுற்றி நான்கு பக்கமும் பார்ப்பனர்கள் வீதி இருக்கும், அதற்கு அடுத்தபடியாக செட்டியார்கள், முதலியார்கள் உள்ளிட்டோர் இருப்பார்கள், அதற்கு வெளியாக வணிகர்கள் இருப்பார்கள், அதற்கும் வெளியாக ஆதிதிராவிடர்கள் இருப்பார்கள். இது எல்லா பகுதிகளிலும் அரசர்களால் உருவாக்கப்பட்ட சாதிய ரீதியான அமைப்பு முறை.

கல்வி :

கல்வி என்பது இந்த நாட்டில் வேதக்கல்வி மட்டும் தான் இருந்தது. 1835இல் மெக்காலே இந்த நாட்டில் மெக்காலே கல்வித் திட்டத்தை அமல்படுத்துகிற வரை வேதக்கல்வி மட்டும் தான் இருந்தது. பார்ப்பனர்களுக்கு மட்டும்தான் கல்வி, மற்றவர்களுக்கெல்லாம் கல்வி கிடையாது, இந்த வேத கல்வி முறையை மாற்றி மெக்காலே வந்த பிறகு அனைவரும் கல்வி கற்க அளவிற்கு அதிகமாக நிதி ஒதுக்கப்படுகிறது, இஸ்லாமியர்கள் அவர்களுடைய கல்வி நிறுவனங்களான மதராசக்களுக்கு நிதி ஒதுக்கி விடுகிறார்கள், கிறிஸ்தவர்கள் அவர்களுடைய மிஷனரிகளுக்கு ஒதுக்கி விடுகிறார்கள், இந்துக்கள் அவர்களுடைய வேத பாடசாலைகளுக்கு ஒதுக்கி விடுகிறார்கள், ஆகவே இங்கு பொதுக் கல்வி முறை இல்லை, இங்கு பொது கல்வி முறையை உருவாக்க வேண்டும் என்று சொன்னவர்தான் மெக்காலே. 1835 இல் மெக்காலே கல்வி முறை வந்த பிறகு தான் நாம் கல்வி நிலையங்களுக்குள் அனுமதிக்கப்பட்டோம், சூத்திரர்கள் ஆகிய நமக்கு கல்வி அறிவு கிடைத்தது மட்டுமல்ல இன்று நாம் அறிவியல், பொறியியல், மருத்துவம், வரலாறு, புவியியல் இவையெல்லாம் படிக்கிறோம்.

ரிக் வேதம் அழிவு வேலைகளை நியாயப்படுத்துகிறது. அரக்கர்கள் (திராவிடர்கள்) கட்டிய மாளிகையை நீர்த்தொட்டிகளை அழிக்கும் சக்தியைக் கொடு என்று தேவர்கல் வேண்டுகிறார்கள். விருத்திரன் என்ற திராவிடனை இந்திரன் தண்டாயுதத்தால் கொல்ல வருகிறான், அப்போது விருத்தினனின் தாய் தாணு அதைத் தடுக்கிறாள் என்ற செய்தியும் ரிக் வேதத்தில் இடம்பெற்றுள்ளது.

பெரியார் 1949 இல் திருக்குறள் மாநாடு நடத்தும்போது ‘கீதையை விடு! குறளை எடு!’ என்று சொன்னார். திருக்குறளுக்கு தான் நாம் மரியாதை கொடுக்க வேண்டும், பகவத் கீதை நமக்கு எதிரான நூல், அண்ணல் அம்பேத்கர் 1944 செப்டம்பர் மாதம் சென்னைக்கு வந்தார், கன்னிமாரா ஹோட்டலில் விருந்துக்கு அழைத்தார்கள், கி.ஆ.பெ.விஸ்வநாதன், பாலசுப்பிரமணியம், ராஜன் உள்ளிட்டோர் அம்பேத்கருக்கு விருந்தளித்தனர். அங்கு அங்கு பேசும் போது ‘பகவத் கீதை பைத்தியக்காரனின் உளறல்’ என்று அம்பேத்கர் பேசினார். அவருக்கு நிறைய கண்டன கடிதங்கள் எழுதுகிறார்கள், கொலை செய்து விடுவேன் என்று கூட மிரட்டினார்கள் என்று அவருடைய தொகுப்பு நூல்களில் எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டில் தான் அவர் துணிச்சலாக பேசினார் ஏனென்றால் இங்கு பெரியார் இயக்கம் இருக்கின்றது, திராவிட இயக்கம் இருந்தது. வடநாட்டில் அப்படி பேசிவிட்டு உயிருடன் வீட்டிற்கு போக முடியாது, அவ்வளவு மோசமான பிற்போக்குத்தனமான ஊராக வடநாடு இருந்தது. இங்கே எந்த சனாதானம் இருந்ததோ அதற்கு ஆப்படிக்க வேண்டும் என்பதற்காக 1920 இல் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தது. அதுவரை ஊர் வேறு, சேரி வேறு என்று இருந்த ஆதிதிராவிடர் பிள்ளைகளுக்கு ஒரே வகுப்பறையில் ஒன்றாக உட்கார்ந்து பாடம் எடுக்க வேண்டும் என்று 1922 ல் பனகல் அரசர் உத்தரவு பிறப்பித்தார். திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நாங்கள் ஆதிதிராவிடர்களை பள்ளியில் சேர்த்துக் கொள்கிறோம், ஆனால் தனி வகுப்பறை கட்டி வைக்கிறோம் என்று கேட்டார்கள். அதாவது மற்ற ஜாதிப் பிள்ளைகள் ஒரு வகுப்பறையிலும் ஆதிதிராவிடப் பிள்ளைகள் தனி வகுப்பறையிலும் இருப்பார்கள், இதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்ட பொழுது பனகல் அரசர் அப்படி முடியாது, ஒரே வகுப்பறையில் தான் படிக்க வேண்டும், ஒன்றாகத் தான் இருக்க வேண்டும் என்று 1922 இல் உத்தரவு போட்டார், இதுதான் திராவிடம்.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஜாதி ஆணவப் படுகொலைகளை தடுத்திட தமிழ்நாட்டில் தனிச் சட்டம் சாதி மறுப்பு இணையர் வாழ்வுரிமைக் கருத்தரங்கம் வலியுறுத்தல்

***கடந்த 08.7.23 அன்று சாதி மறுப்பு இணையர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் கீழ்ப்பாக்கம் டான் போஸ்கோ கலைக் கல்லூரி வளாகத்தில் சாதி ஆணவக்கொலை- குற்றங்களைத் தடுத்திட தனிச்சட்டம் இயற்றக்கோரியும், சாதி மறுப்பு இணையர்களுக்கான வாழ்வாதார கோரிக்கையாக 11 அம்ச கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்றவும் அரசாணை பிறப்பிக்கவும் வலியுறுத்தி கருத்தரங்கம் நடைபெற்றது.***

*இக்கருத்தரங்கிற்கு, திராவிடர் விடுதலைக்கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் வரவேற்புரையாற்றினார். சாதி ஆணவத்தால் கொல்லப்பட்ட காதலர்கள், இணையர்களுக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இக்கருத்தரங்கத்திற்கு மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த பேரா.சரசுவதி தலைமை வகித்தார். சாதி ஒழிப்பு முன்னணியின் பொதுச்செயலாளர் வ.ரமணி, கோரிக்கையின் முக்கியத்துவதை விளக்கி நோக்கவுரையாற்றினார்.*




*தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் ஏ.எஸ்.குமரி உரையாற்றுகையில் சாதி ஆணவக்கொலைகள் தடுக்கப்படவேண்டும். அதற்காக திராவிட ஆட்சியில் முயற்சிகள் நடக்கிறது. மகளிர் ஆணையம் இதில் தீவிரமாக பங்கெடுக்கும் என்றார். அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி பேசுகையில்,“சாதி மறுப்பு இணையர் வாழ்வுரிமைக் கருத்தரங்கத்தில் நான் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அதேசமயம் சாதி ஆணவக்கொலைகளை பார்க்கும் போது வேதனையாகவும் இருக்கிறது. சாதி ஆணவக்கொலைகள் தடுக்கப்பட வேண்டும். “சாதி என்பதே ஒரு பொய். நமது முன்னோர்கள் சாதியில்லாமல் வாழ்ந்திருக்கிறார்கள். இடையில் வந்தது தான் சாதி. இதைத்தான் நாம் இன்றைய தலைமுறையிடம் கொண்டுசெல்லவேண்டும். முந்தைய தலைமுறை அவ்வாறு இல்லை ஆனால் இன்றை தலைமுறை இளைஞர்கள் மத்தியில் சாதி அடையாளப்படுத்தப்படுகிறது. அதனை சரி என்று பேசும் நிலை உருவாகியிருப்பது வேதனைக்குரியது. சாதி மறுப்புத்திருமணங்கள் அதிகரிக்க வேண்டும். இதனை ஊக்குவிக்கும் விதமாகத்தான் நடந்துகொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் 50,000 ஊக்கத்தொகையும், 5 கிராமம் தங்கக் காசும் அறிவித்தார். சாதி மறுப்புத்திருமணங்கள் அதிகரித்திட வேண்டும். நீங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு நான் உறுதுணையாக இருப்பேன். அதனை வலியுறுத்துவேன்“ என்றார்.*

*வழக்கறிஞர் ப.பா.மோகன், பேசுகையில் கோகுல்ராஜ் ஆணவக்கொலைக் குற்றம் குறித்த வழக்கின் பின்புலத்தை மார்க்சிய அரசியல் பார்வையோடு முன்வைத்தார். அமைப்புசாரா தொழிலாளர் கூட்டமைப்பின் ஆலோசகர் ஆர்.கீதா, பேராசிரியர் அரங்க மல்லிகா, வழக்கறிஞர் அஜிதா, எழுத்தாளர் ரகுபதி சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் ரவீந்திரநாத் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் சாதி மறுப்பு இணையர்கள் திரளாக கலந்துகொண்டு தங்களின் அனுபவங்களையும் திருமணப் பதிவின் போது சார்பதிவாளர் அலுவலகத்தில் சந்தித்த நெருக்கடிகளையும் பகிர்ந்துகொண்டனர். சாதி மறுப்பு இணையர்களுக்கு ஏ.எஸ். குமரி அவர்கள் நினைவுப்பரிசாக நூல்களை வழங்கினார். அறிஞர் அண்ணா சுயமரியாதைத் திருமண நிலையத்தின் அமைப்பாளர் ரமேஷ் பெரியார் நன்றியுரையாற்றினார்.*

***கருத்தரங்கத்தின் வாயிலாக முன்வைக்கப்பட்ட சாதி மறுப்பு இணையர் வாழ்வுரிமைக்கான கோரிக்கைகள்***



*1. 2019ல் இராஜஸ்தான் மாநில காங்கிரசு அரசு ஆணவக்கொலையை தடுத்திட சட்டம் இயற்றியதுபோல், தமிழ்நாட்டில் தொடரும் சாதி ஆணவக்கொலை – குற்றங்களைத் தடுத்திட தனிச் சட்டம் இயற்ற வேண்டும்.*

*2. சாதி மறுப்பு இணையர்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்யும்போது ”பெற்றோர்கள் வரவேண்டும்” எனக் கட்டாயப்படுத்தவோ நிபந்தனையோ விதிக்கக் கூடாது” இந்த விதிமுறையை கடைபிடிக்காமல் சாதி ரீதியாக அணுகும் பதிவுத்துறை அதிகாரிகள் மீது SC/ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்திட வேண்டும்.*

*3. பதிவுத்திருமணச் சட்டம் பிரிவு 7ல் சுட்டிக்காட்டியுள்ள “சார்பதிவாளரின் மனம் திருப்தியடைந்தால்” மட்டுமே திருமணப் பதிவிற்கு ஒப்புதல் அளிக்கலாம் என்ற நிபந்தனையை நீக்க வேண்டும்.*

*4. மாவட்டந்தோறும் திருமணங்கள் பதிவுசெய்திட மட்டுமே தனி திருமணப் பதிவாளரை நியமிக்க வேண்டும்.*

*5. காதல் திருமண இணையர்கள் திருமணத்தைப் பதிவு செய்வதற்கு மணமகன்/மணமகள் எல்லையில் இருப்பிட முகவரிக்கு உட்பட்டு உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்ற விதிமுறையை நீக்க வேண்டும். “தமிழகம் முழுவதும் இணையர்கள் எந்த சார்பதிவாளர் அலுவலகத்திலும் பதிவு செய்துகொள்ள அரசாணை/ சுற்றறிக்கைவிட வேண்டும்“*

*6. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு ‘கலப்புத்திருமண’ உதவித்திட்டம் என்ற பெயரை – டாக்டர் முத்துலட்சுமி நினைவு ‘சாதி மறுப்புத்’ திருமண உதவித்திட்டம் என்று பெயர் மாற்றம் செய்திட வேண்டும்.*

*7. சாதி மத மறுப்பு இணையர்களுக்கு தனி கவனம் செலுத்தி மாவட்டந்தோறும் பாதுகாப்பு இல்லங்கள், குடியிருப்பு, அரசு வேலை, வீடுமனைப் பட்டா வழங்கிட அரசாணை பிறப்பிக்கவேண்டும். சாதி, மத மறுப்பு இணையர்களுக்கு தமிழக அரசு 5% இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும்.*

*8. 2016ல் உசிலம்பட்டி விமலாதேவி ஆணவக்கொலை வழக்கில் நீதிபதி ராமசுப்ரமணியன் அவர்கள் வழங்கிய தீர்ப்பை மாவட்டந்தோறும் செயலாக்க வேண்டும்.*

*9. சாதி மறுப்பு, காதல் மணம் செய்துகொள்ளும் மணமகன்மீது மணமகளின் வயதைக் குறைத்துக்காட்டி, வழக்குகள் பதியப்பட்டு போக்சோ சட்டத்தில் சிறைப்படுத்தப்படுவதும் நெடுநாள் சிறையில் இருப்பதுமான சம்பவங்கள் பரவலாக நடக்கின்றன. அவ்வாறு பிழையாக வயதைக் குறைத்து புகார் கொடுத்ததாக பின் நாட்களில் தெரியவந்தால் புகார் கொடுத்தவர், மணமக்களின் பெற்றோர்கள்மீது வழக்குப்பதிவு செய்யவும் சிறைப்படுத்தவும் உரிய சட்ட விதிகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டும்.*

*10. சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்ட இணையர்களுக்கு எதிராக போக்சோ சட்டத்தை தவறாகப் பயன்படுத்தி வழக்கு பதிவு செய்யும் காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டும்.*

*11. சாதி ஒழிப்புக் கருத்தியலை வளர்க்கும் விதமாக தமிழக அரசு பள்ளி, கல்லூரிகளில், தொலைக்காட்சிகளில், செய்தித்தாள்களில் சமத்துவ சுயமரியாதை பகுத்தறிவு சிந்தனையை பரப்பிட வேண்டும். அத்தோடு தொலைபேசி, இணையவழியாக குறுஞ்செய்திகள், விளம்பரங்களை அறிவிப்பு செய்திட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.*

*சாதி மறுப்பு இணையர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம், சாதி ஒழிப்பு முன்னணி, மக்கள் சிவில் உரிமைக் கழகம் உள்ளிட்ட 23 அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.*

***செய்தி : வ.ரமணி, ஒருங்கிணைப்பாளர்,***
***சாதி மறுப்பு இணையர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு.***

# ஈரோடு வடக்கு மாவட்டக் கழகம் தயாராகிறது

ஈரோடு வடக்கு மாவட்ட திவிக - வின் மாவட்ட மாதந்திர கலந்துரையாடல் கூட்டம் 2.07.23 ஞாயிறு கோபி நாகப்பன் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழகத் தோழர்களால் எடுக்கப்பட்ட தீண்டாமை நிறைந்த பகுதிகளின் பட்டியலை தொகுத்து தலைமைக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வழங்கிட குழு அமைக்கப்பட்டது.

வருகின்ற 9.07.2023 ஞாயிறு அன்று நம்பியூர் பகுதியில் கழகம் அறிவித்த திராவிடமா? சனாதனமா? பரப்புரை பயணத்தை துவங்குவது எனவும் தொடர்ந்து ஞாயிற்கிழமை தோறும் ஒவ்வொரு ஒன்றியங்களிலும் பிரச்சார பயணத்தை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டம் தொடங்கும் முன் தோழர்கள் அனைவரும் கடந்த 31.05.2023 அன்றுடன் வேளாண்மை துறை இணை இயக்குநராக பணி புரிந்து ஒய்வு பெற்ற ஆசைத்தம்பி அவர்களை சந்தித்து கழகத்தின் சார்பில் பயணாடை அணிவித்து கழக வெளியீடுகள் வழங்கப்பட்டது. ஆசைத்தம்பி மற்றும் அவரது இணையர் கற்பகம் அவர்களும் அவரது இல்லத்திற்கு வருகை புரிந்த அனைத்து தோழர்களுக்கும் உணவு வழங்கியதோடு மட்டுமில்லாமல் கழகத்தின் புரட்சி பெரியார் முழக்கம் வார ஏடுக்கு ரூ. 5000/- நன்கொடை வழங்கி சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கழகத்தின் ஒன்றிய பகுதி, கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கலைஞர் 100 – திண்டுக்கல் மாவட்ட கலந்துரையாடல் அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP    Posted : July 13, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran